# கடற்கரை கவியரங்கு எண் - 615

நாள் 03-07-2022

## *மனமே அறிவாய்!*

பேதைமை இல்லை! பெருமைகள் இல்லை!
வேதனை என்பதும் வாழ்வினில் இல்லை!
சாதனை என்னும் பெருமைகள் யாவும்,
வேதனை செய்யா மனத்தின் பயனே!

யாதும் ஓர் நிலை யாவரும் நிறையே!
தீதில்லா மனத்தில் திகழுமாம் இறையே!
போதும் என்றோர் பொருள்நிறை மனம்போல்,
யாதுமே வாழ்வின் இயன்நிலை யாகுமே!

காதலும் அன்பும் கனிந்த மனத்தினில்,
வேதனை இல்லை வெறுப்பும் இல்லை!
ஆதலால் உலகை அன்பால் நிரப்புவோம்!
சூதில்லா உறவுகள் தொடர்ந்திட மகிழ்வோம்!

ஆதவன் கதிரும் அடுத்துக் காற்றும்,
சூதின்றி உயிர்களை சுகமாய் அணைக்கையில்,
யாதுமே யாவுமே நிகரென்று அறிவோம்!
மாதவம் என்பதும் மனத்தின் நிறைவே!

வாதமும் பித்தமும் ஆனதாம் இந்த உடலே!
வயிற்றுப் பசிக்கு வாழ்வை நகர்த்திடும்,
உயிர்கள் மற்றவை உலகினில் என்றும்!
உயிர்களைப் பேணி வாழ்வியல் தெளிவோம்!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
02-07-2022 (10.50 PM)

